**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-17 No. 04 October-December 2023**

# தோல் நாவல் காட்டும் தொழிலாளர்களின் நிலை

**நெறியாளர்**
முனைவர் மோ.ஜ.மகேஸ்வரி,
இணைப்பேராசிரியர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
சேலம் - 16.

**அ. தமிழரசி,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
சேலம் - 16.

**ஆய்வுச் சுருக்கம்**

People's lives are reflected in literature. Man's everyday life is portrayed in his literary works. Social novels discuss the issues that have existed in society. It exhibits people's empathy for the community. The most effective way to change people's minds is through these kind of novels. Books serve as an instrument for defining the future through events from the past and present. This is how the Thol novel by D. Selvaraj has been interpreted as the topic of this assessment. This study aims to explore the pain, suffering, and brutality experienced by laborers in the leather sector.

**முன்னுரை**

இறைவனால் உலகில் படைக்கப்பட்ட ஒவ்வொரு தனிமனிதனும் தன்னுடைய வாழ்க்கையில் மற்றொரு நபரைச் சார்ந்து வாழ்கிறான். உறவு முறையில் சில தனிமனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பு குடும்பம். பல குடும்பங்கள் ஒன்றாக சேர்ந்து ஒரு குழுவாக ஓரிடத்தில் வாழ்ந்தால் அது சமுதாயம் என்றழைக்கப்பட்டது. பெரும்பாலும் சமுதாயம் தொழில் சார்ந்து காணப்பட்டது. பின்பு காலங்கள் செல்லச் செல்ல அவ்வமைப்பு சாதியாக மாறிவிட்டது. நாவல்கள் பல்வேறு தொழில் செய்யும் மக்களின் வாழ்வியலையும் தெளிவாக படம்பிடித்துக்காட்டுகிறது. அந்நிலையில் ஆசிரியர் டி.செல்வராஜ் அவர்களின் தோல் நாவலை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**‘தோல்’ நாவலின் அமைப்பு**

எழுத்தாளர் டி.செல்வராஜ் அவர்களால் 2010ஆம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு மாபெரும் படைப்பே ‘தோல்’ நாவலாகும். இந்நாவலின் சிறப்பினை மேலும் பெருமைப்படுத்த 2011ஆம் ஆண்டிற்கான ‘இலக்கிய விருது’ம், 2012ஆம் ஆண்டிற்கான ‘சாகித்ய அகாதெமி விருது’ம் இந்நாவலுக்கு வழங்கப்பட்டது. இதன் கதையமைப்பு 117 கதைமாந்தர்களைக் கொண்டு 26 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது. திண்டுக்கல் பகுதியில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களின் அவலநிலையை மையமாகக் கொண்ட கதையமைப்பைக் கொண்டுள்ளது.

**தொழிலாளர்கள்**

உடல் உழைப்பால் ஒரு தனிநபரோ அல்லது ஒரு குழுவோ ஏதேனும் ஓர் அமைப்பிற்கோ அல்லது நிறுவனத்திற்கோ கூலி பெற்றுக் கொண்டு வேலைசெய்யும் அனைவரும் ‘தொழிலாளர்கள்’ என்றழைக்கப்படுகின்றனர். தொழிலாளர்களைப் பற்றி வள்ளுவப் பெருந்தகை,

**“இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது**

**கைசெய்தூண் மாலை யவர்”**

**(குறள்: 1034)**

என்னும் குறளில், கையால் தொழில் செய்து உணவுதேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார். தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் பொருள் ஈவார் என்று பெருமைப்படுத்திக் கூறியுள்ளார்.

தொழிலாளர்களின்றி எத்தொழிலும் இல்லை எனலாம். **“தொழிலாளர்கள் உதவியின்றி உலகம் நடைபெறாது. தோட்டி முதல் தொண்டைமான் வரையிலுள்ள எல்லாரையும் தொழிலாளர்கள் என்றே கூறலாம். எல்லாம் வல்ல இறைவனும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழிலை நாடோறும் ஓயாது செய்துகொண்டே இருக்கிறான். உலகத்தில் எல்லாரையும் தொழிலாளர்கள் எனக் கூறுவது குற்றமாகாது”**[1] என்கிறார் டி.என்.இராமச்சந்திரன்.

**தோல் தொழிற்சாலை**

தோல் தொழிற்சாலையென்பது இறந்த விலங்குகளின் தோலை ஓரிடத்தில் வைத்து அத்தோலை பதப்படுத்தும் இடமாகும். பதப்படுத்தல் என்றால் இறந்த விலங்குகளிலிருந்து உரித்து எடுக்கப்படும் பச்சைத்தோலை கெடாதவாறு பாதுகாப்பதாகும். தோல் கெடாமலிருக்க உரித்தவுடன் பொடிக்கப்பட்ட உப்புத்தூளை அதன் உட்பகுதியில் தடவுவர். அதனை வேதிப்பொருட்கள் கலக்கப்பட்ட நீரில் நன்கு ஊறவைப்பர். இதனால் அழுக்குகள் அப்புறப்படுத்தப்படும்.

அப்புறப்படுத்திய பிறகு, வேதிப்பொருள் கலவையோடு கூடிய சுண்ணாம்புக் கரைசலில் அத்தோலினை ஊறவைப்பார்கள். பிறகு தோலிலுள்ள மயிர்கள் நீக்கப்படும். தோலிலுள்ள சுண்ணாம்புக் கரைசலை நீக்கப் பலமுறை அமிலம் கலந்த நீரில் முக்கி எடுப்பர். இறுதியாக செம்மையான மயிர் மற்றும் அழுக்கு நீக்கப்பட்ட பச்சைத்தோல் கிடைக்கும்.

**தோல் பதனிடும் முறைகள்**

பொதுவாக விலங்குகளின் தோலைப் பதப்படுத்துவதற்கு மூன்று முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தாவரப் பதனிடும் முறை,
2. தாதுப் பொருள் பதனிடும் முறை,
3. எண்ணெய் பதனிடும் முறை என மூவகையாகும். தற்காலத்தில் நவீன முறையில் பதப்படுத்தப்படுகிறது.

**தோல் தொழிலாளர்களின் நிலை**

தோல் பதனிடும் தொழிற்சாலையில் வேலைபுரியும் மக்கள் மனதளவிலும், உடலளவிலும் மிகுந்த பாதிப்புக்கு ஆளாகின்றனர். இவர்களால் தங்களுடைய வாழ்க்கையை முழுமையாக வாழ முடிவதில்லை. தோலை சுத்தம் செய்ய சுண்ணாம்புக் குழியில் இறங்குபவர்கள் நரக வேதனையை அனுபவிக்கின்றனர். பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர்.

**“நாள் முழுவதும் சுண்ணாம்புக் கலவை கலந்த நீரில் நாற்றம் பிடித்த நல்ல நிணவாடை வீசும் மாட்டுத்தோலையும், ஆட்டுத்தோலையும் போட்டு அலசுவதாலும், மிதித்துச் சவட்டுவதாலும் பாதங்களும், கைகளின் உட்பகுதியும் வெந்து காயமாகிக் காய்த்துப்போய்விட்டன. பாதங்களில் விப்பும், விரிவும் ஏற்பட்டு நடப்பதற்கே சிரமமாக இருந்தன. சுண்ணாம்பு இரசாயனத்தின் வேகத்தில் ரோமக் கால்கள் அத்தனையும் கருகிப்போய் இருந்தன.”**[2]

சுண்ணாம்புக் குழிகளில் தோலைச் சுத்தம் செய்பவர்கள் ஏதாவதொரு நோய்க்கு ஆளாகி இறந்துப்படுகின்றனர். **“சுண்ணாம்புக் குழி காளவாயிலில் இருந்துவரும் புகையை சுவாசிக்க முடியாமல் மூச்சுமுட்டும். தப்புத்தவறி கால் இடறிக் குழியில் விழுந்தால் இறந்து போவதுமுண்டு. ஆனால் இவர்களுக்கு வெக்கை நோயாலோ, ஈழல் நோயாலோ மரணம் ஏற்படுவது சாதாரணம்”**[3] ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் செய்யும் தொழிலின் அடிப்படையில் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது என்பதை தெளிவாக அறியமுடிகிறது.

**கொத்தடிமைகளாக நடத்தப்படல்**

கொத்தடிமை என்பது பணத்திற்காக ஒரு குடும்பமோ அல்லது ஊரோ தலைமுறை தலைமுறையாக பணம் படைத்தவர்களிடம் அடிமைப்படுட்டுக் கிடப்பதாகும். அதாவது, **“கொடுத்த கடனுக்கு ஈடாகக் கடன்வாங்கியவனையே அடகுப்பொருளாக வைத்துக்கொள்வது கொத்தடிமை முறை”**[4] எனப்படுகிறது. அவ்வாறு அடிமைப்படுத்தப்படுகின்ற மனிதன் பிணைத்தொழிலாளி அல்லது கொத்தடிமை எனச் சொல்லப்படுகிறான்.

தோல் தொழிலாளர்கள் வேலையில் சேர்க்கப்படுவதற்கு முன்னதாகவே முதலாளிகளிடம் அடிமை சாசனத்தில் முறி எழுதிக் கொடுத்துவிட்டு தான் வேலை செய்ய வேண்டும். ஒருவன் தன்னுடைய கடனை அடைக்கும் வரை முதலாளிகளுக்கு உழைத்து உழைத்து அடிமையாகவே அவன் வாழவேண்டுமென்பது தான் அடிமை மக்களின் விதியாகும்.

**ஒடுக்கப்பட்ட குலமும், தொழிலும்**

உலகில் பிறந்த மக்களனைவரும் பிறப்பால் சமமானவர்களே. குலம், தொழில் போன்ற காரணங்களால் மக்கள் பாகுபடுத்தப்படுகின்றனர். இதனையே வள்ளுவர்,

**“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்”**
**(குறள்: 972)**

என்று கூறுகிறார். இவ்வாறு கூறினாலும் ஏற்றத்தாழ்வுகளும், ஒடுக்கு முறைகளும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கின்றன. சாதி, பொருளாதாரம், பண்பாடு, மொழி, பாலியல் போன்ற காரணங்களினால் விளிம்புநிலைக்குப் புறந்தள்ளப்படுகின்றனர்.

சுண்ணாம்புக் குழிகளில் பணிபுரியும் நபர்கள் கடுமையானப் பாதிப்பிற்கு ஆளாகின்றனர். ஆனால் அவர்களது அந்தப்பணிக்குரிய மரியாதை கிடைப்பதில்லை. மாறாக, அவர்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். வேதனைத் தாளாமல் வேலையை விட்டுத் தப்பியோடுபவர்களைப் பிடிக்க தனிக்குழுவையே வைத்திருந்தனர்.

**“வேலைப் பளுவும், கொடுமையும் தாங்காமல் தப்பியோடும் தோல் ஷாப்புத் தொழிலாளர்களைப் பிடிப்பதற்கும், அவர்களை உரிய இடத்தில் ஒப்படைக்கவும் முதலாளிகள் ரெயில்வே ஸ்டேசனிலும், பஸ் நிலையங்களிலும் நியமித்திருக்கும் அடியாட்கள் இவர்களென்பது ஓசேப்புக்கு விளங்கிவிட்டது.”**[5] இது ஓசேப்புக்கு மனதிற்குள் தோன்றியதாகும். அவன் ஒடுக்கப்படுகிறோம் என்பதையுணர்ந்து தப்பிக்க நினைக்கிறான். ஆனால் கழுவத்தேவனிடம் மாட்டிக் கொள்கிறான்.

**உழைப்புச் சுரண்டல்**

**“மனிதனின் உழைப்பு, ஆற்றல் ஆகிய திறன்களுக்கு ஏற்ப ஊதியம் வராமல் அத்திறன்களைப் பயன்படுத்தி உழைப்பை மட்டும் உறிஞ்சி அதிக இலாபத்தைச் சிலர் அடையும் முறை**

**சுரண்டலாகும்,"**[6] முதலாளி அல்லது பண்ணையார், ஒருவனது உழைப்பை மட்டும் கடுமையாக வாங்கிவிட்டு அதற்குரிய கூலியைக் கொடுக்காமல் ஏமாற்றுவது உழைப்புச் சுரண்டலாகும்.

சுண்ணாம்புக் குழிகளே மக்களின் சீவனில் பாதியைத் தின்றுவிடுகிறது என்று கூறும் வரிகளில் மக்களின் உழைப்புச் சுரண்டலை அறியலாம். **"வருஷமெல்லாம் என் உழைப்பையும், என் இரத்தத்தையும் உறிஞ்சனது போதாதா. எங்ககிட்ட வாங்கிய ஒப்பந்தப் பத்திரம் கெடு முடிஞ்சு போயிட்டது. என் கைக்கு வரலேண்டா நல்லாருக்காது."**[7] என்று மம்முதன் கோவமாக முஸ்தபா மீரானிடம் கேட்டான். இதிலிருந்து மக்களின் மனவேதனைப் புலப்படுகிறது.

**சமூக ஏற்றத்தாழ்வு**

செல்வநிலையில் கீழ்நிலையில் இருப்பவர்கள் உழைப்பாளிகள் ஆவர். ஒரு பண்டத்தை உற்பத்தி செய்து அதனை விற்பனைக்குரியதாக மாற்றும் தொழிலாளிகளுக்கும் அப்பண்டத்திற்கு தொடர்பே இல்லாமலாகி விடுகிறது. மாறாக முதலீடு செய்யும் முதலாளி அப்பண்டத்திற்கு உரியவராகிறார். அதன்மூலமாக கிடைக்கும் பயனைப் பெறக்கூடியவராக இருக்கிறார். எனவே முதலாளியின் சொத்து உயர்வடைவதாகவும், தொழிலாளியின் நிலை தாழ்வுறுவதாகவும் அமைகிறது.

அடிமைச் சமூகத்தில் மனிதனும் ஒரு பண்டமாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டான். இந்த அடிமை வாணிபம் மனிதச் சமூகத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்தது. இத்தகைய அடிமைச் சமூகத்தினைப் பற்றி, **"தோல் பணிக்குக் கூடப் போகமுடியாமல் மார்க்கெட்டில் குப்பையள்ளிப் போட்டதில் கிடைத்ததைக் கொண்டு வரகரிசி கஞ்சி வைப்பதற்குதான் போதுமானதாக இருந்தது."**[8] என்ற வரிகளில் ஆசிரியர் விளக்குகிறார்.

**உணவு நெருக்கடி**

**"வறுமை என்பது இல்லாமை. ஒரு மனிதன் தன் வருமானம் போதாததாலோ அல்லது அறிவற்றச் செலவினங்களாலோ தன்னுடைய மனநிலையையும் உடல்நிலையையும் ஏற்றதாக வைத்துக் கொள்ளவும், தன்னைச் சார்ந்தவர்களைத் தான் வாழும் சமுதாயம் எதிர்பார்க்கும் அளவுக்கு வசதிகளோடு காப்பாற்றவும் முடியாத நிலையே ஏழ்மை"**[9] ஆகும்.

தோல் பதனிடும் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் பஞ்சப்படி, சம்பள உயர்வு கேட்டும், போனஸ் கோரிக்கை வைத்தும், தோல் ஷாப்பு முதலாளிகள் ஒத்து வராததால் மூன்று மாதங்களாக வேலைநிறுத்தம் என்கிற சிரமத்தை அம்மக்கள் ஏற்றுக்கொண்டதால் பசி, பட்டினி என்பதோடு முதலாளிகளின் அடியாட்களின் இன்னல்களையும் அம்மக்கள் ஏற்க வேண்டியதாயிற்று.

கிராமங்களில் அரிசியும் நவதானியமும் கிடைக்காமல் அற்றுப்போய்விட்டதால் உள்ளது உரியது அத்தனையும் அடமானம் வைத்தும் தெரு தெருவாக மீன்விற்றும், குப்பைகளைப் பொறுக்கியும் அதை விற்று அதில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்பம் நடத்தி வந்தனர்.

**தீண்டாமை**

தீண்டாமை என்பது ஒரு மனிதனை இன்னொரு மனிதன் சமமாக கருதாமையாகும். குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த மக்கள் பொதுவழியைப் பயன்படுத்தத் தடை, பொதுக்குளத்தைப் பயன்படுத்தத் தடை, கிணற்றில் தண்ணீர் எடுக்கத்தடை, கோயிலில் வழிப்படத் தடை, உயர்ந்த இனத்தினரைக் கண்டால் தூரப் போய்விடுதல் எனப் பல வடிவங்களில் தீண்டாமை எனும் பெருங்குற்றம் சமூகத்தில் காணப்படுகிறது.

நாவலில் ஊருணிக்குப் பக்கத்தில் இறந்துகிடந்த சின்னக்கிளியின் சடலத்தை இடுகாட்டிற்கு கொண்டுசெல்வதில் தான் சிக்கல் ஏற்படுகிறது. மேல்சாதிக்காரர்கள் கருமாரியம்மன் கோவில் வழியாகப் பிணத்தைக் கொண்டு செல்லவிடாமல் தடுக்கின்றனர். அப்போது சங்கரனிடம் காக்கையன்

என்கிற வெட்டியான், **"சாமி நீங்கதான் எங்களக் காப்பாத்தனும். பரம்பரை பரம்பரையா இந்த ஊர் சனங்களுக்குத் தொண்டுழியம் செஞ்சு இத்துப்போனான். உப்ப எம்பேத்தியோட பெணத்த கூட இடுகாட்டுக்குக் கொண்டு போக வழி உடமாட்டேண்டு மறிக்காவ ஆண்டைக"**[10] என்று கூறுகிறார். இதுபோன்ற நிகழ்வுகள் இன்றளவிலும் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.

**முடிவுரை**

சமுதாயத்தில் நடக்கும் பிரச்சனைகளில் தொழிற்சாலை பிரச்சனைகளும் ஒன்றாகும். தொழில்சாலையில் மக்களுக்கு நடக்கும் அநீதிகளையும் அவர்களின் அடிமை வாழ்க்கை முறைகளும் காலம் காலமாக இன்றும் நடந்து கொண்டிருக்கின்றன. அவர்களின் உழைப்பிற்கேற்ற ஊதியம் வழங்கப்படுவதும் இல்லை. அவர்களின் வாழ்க்கையில் போராட்டங்களுமே ஒரு வாழ்க்கையாக நடக்கின்றன. முதலாளிகளின் ஆதிக்கம் மேலும் மேலும் வளர்ச்சி பெற்று கொண்டே போகின்றன. கீழ்சாதி மக்கள் அடிமைகளாகவே உள்ளனர். தொழிலாளர்களின் இன்னல்களும், உணர்வுகளும் நாவலில் தெளிவாக எடுத்தியம்பப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**

1. டி.என்.இராமச்சந்திரன், திரு.வி.க.வின் தேசபக்தன் கட்டுரைகள், ப.113
2. டி.செல்வராஜ், தோல், ப.60
3. மேலது, ப.85
4. மேலது, ப.86
5. மேலது, ப.59
6. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-9, ப.265
7. டி.செல்வராஜ், தோல், ப.206
8. மேலது, ப.151
9. வாழ்வியல் களஞ்சியம், தொகுதி-9, ப.86
10. டி.செல்வராஜ், தோல், ப.105